PHONE No. 55630

REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 129

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: ஐப்பசி 27உ வியாழன் (12—11—53) ☆ ☆ ☆ வெளியூர்: ஐப்பசி 28உ வெள்ளி 13—11—53

நேருபிடிவாதத்தின் விலை ரூ. 19 லட்சம்!

—(:)—

ஆந்திர மாநில அமைப்பு கிளர்ச்சியின் விளைவு!

நஷ்டஈடு தரமுடியாதாம்!

லால்பகதூர் சாஸ்திரி கைவிரிப்பு!

சென்னை, நவ. 10—

ஆந்திர மாநிலம் தனியாகப் பிரியவேண்டுமென்று ஆந்திரர்களால் நடத்தப்பட்ட கிளர்ச்சியில் ரயில்வேயிலிருந்து, நாசமாக்கப்பட்டும், களவாடப்பட்டும் பாழான சொத்தின் மதிப்பு ரூ. 19 லட்ச ரூபாயிருக்குமென தென்னிந்திய ரயில்வேயின் ஜெனரல் மானேஜர் டி. ஏ. ஜோசப் கூறினார்.

மேற்படி பொருள்களுக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று தென்னிந்திய வர்த்தகக் கழகத்தினர், இந்தியப் பேரரசின் அமைச்சரிடம் வேண்டினர். வியாபாரிகள் அடைந்த நட்டத்தை ஈடு செய்வதற்குப் பதில் ஒரு அரசாங்கம், மற்றொரு அரசாங்கத்தின் மீது பொறுப்பை சுமத்திவிடுவது, முறையல்லவென்று வர்த்தகக் கழகத்தினர் விளக்கிக் காட்டினர்.

மாநில அரசுகளைப் போறுத்து ஏற்பட்ட கலகத்தில் விளைந்த நட்டத்திற்கு, ரயில்வே பொறுப்பு ஏற்க முடியாதென ரயில்வே நிர்வாகி கூறியதையே வற்புறுத்தி, இந்திய ரயில்வே அமைச்சரும் நட்டஈடு கொடுக்க முடியாதெனக் கூறிவிட்டார்

ஆந்திர மாநிலக் கிளர்ச்சியால் ரயில்வேக்கு இரண்டு லட்சம் ரூபாய் நட்டமேற்பட்டுள்ளது.

நடைமுறைக்கு உதவாத திட்டம் 4 திங்களாகத் தோல்வி

மக்கள் தொகை அதிகரிக்கிறது

இந்நூற்றாண்டு முடிவிற்குள் 325 கோடியாகிவிடும்

நியூயார்க், நவ 2—

இப்போதுள்ள உலக மக்கள் தொகை 240,00 00,000 கோடியாகும். இந்த நூற்றாண்டு இறுதியில 325,00,00,000 கோடியாக பெருகிவிடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது

இன்னும் 150 ஆண்டுகளில், 400,00,00,000 கோடியாக அதிகரித்து, பின்னர் குறைய ஆரம்பிக்கலாம் என்று கூறப்படுகிறது. —[illegible]

உலகத்திலேயே மிகப் பெரிய இரண்டு ரெயில்வே பிளாட்பாரங்கள் இந்தியாவில் உள்ளன; ஆசியாவில் உள்ள மிகப் பெரிய பத்து ரயில்வே பிளாட்பாரங்களில், எட்டு பிளாட்பாரங்கள் இந்தியாவில் உள்ளன

கல்வி நிபுணர்களைக் கலந்து செய்யாத ஏற்பாடு வெறும் எதேச்சாதிகாரமே!

கல்லாத கிராமத் தொழிலாளியால் சிறுவர்களின் சிந்தனையும், சீலமும் பாழாகும்

குறிப்பிட்ட சில இடங்களில் பரிட்சார்த்தமாக அமுல் நடத்துவது விரும்பத்தக்கது

தென் கன்னட மாவட்ட ஆசிரியர் குழுவினர் கருத்து

மங்களூர், நவ. 10—

"சென்னை சர்க்காரின் புதிய தொடக்கக் கல்வித் திட்டம், இங்கு நான்கு [illegible]களாக நடைமுறையில் படுதோல்வி அடைந்திருக்கிறது."

"கல்வித் துறை[illegible] கலந்துகொள்ளாமல், திட்டத்தைப் புகுத்தப்பட்டுள்[illegible]வே மக்களாட்சி முறைக்கு மாறுபட்டதாகும்."

—இவ்வாறு, தென்கன்னட மாவட்ட ஆசிரியர் குழு மாநாட்டில், அதன் செயலாளர் தோழர் பு. சீனிவாச [illegible] குறிப்பிட்டார்கள்.

புதிய கல்வித் திட்டத்தின் மீது விவாதத்தைத் துவங்கி வைத்து, செயலாளர் மேலும் பேசும் பொழுது, ஆசிரியர்களைக் கலந்து கொள்ளாதது வருந்தத்தக்கதுதான் என்றும், எல்லா விஷயங்களையும் மூன்று மணி நேரத்திற்குள் கற்பிப்பதென்பது முடியாத காரியமென்றும், கற்பன் வினையாதென்றும் குறிப்பிட்டார்.

"கிராமக் கைத்தொழிலாளர்களின் குழந்தைகள், இந்தப் புதிய திட்டம் புகுத்தப் படுவதற்கு முன்பே, பள்ளிக்கூடங்களுக்கு வந்துகொண்டுதான் இருக்கின்றன. அந்த காலத்தில் வீட்டிலும் அக்குழந்தைகள் பெற்றோர்களுக்கு உதவி செய்து கொண்டுதான் வருகின்றன."

"எழுத்தறிவற்ற கிராம கைத்தொழிலாளி ஆசிரியனாக முடியாது. இதுவுமல்லாமல், எல்லா பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளை, தொழில் பயிற்சி பெற அவனிடம் அனுப்பி வைக்க ஒப்பமாட்டார்கள்."

"புதிய திட்டத்தைப் புகுத்துவதற்கான சூழ்நிலையை உண்டாக்கவில்லை. குழந்தைகளின் தொழிற் பயிற்சியைக் கண்காணிக்க முன்னேற்பாடாகக் கிராமக் குழுக்களை இன்னும் உருவாக்கவில்லை. கல்வித் துறையில் மேற்கொள்ளப்படும் பொறுப்பற்றப் புறக்கணிப்பால், குழந்தைகளின் சிந்தனையும் சீலமும் வளருவதற்கில்லாமல் நின்றுபோகக் கூடும்."

"கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களிடம் நம்பிக்கை வைக்காத சர்க்கார், அடிக்கடி நடைமுறைகளில் திருத்தம் செய்துகொண்டே இருக்கும் எதேச்சாதிகாரதிட்டங்களுக்கு, அவர்களுடைய ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதும் கூடாது. கிராமிய வாழ்க்கை மாற்றி அமைக்கப்பட்டால்தான் திட்டமும் வெற்றி பெறும்."

"ஆங்கில மொழிக்குப் பதிலாக, திடீரென்று இந்தி மொழியை நுழைப்பது என்பது அவசியமற்றதாகும். இதனால் கல்வித் துறையில் பெரும் குழப்பம் ஏற்[illegible]

மக்கட் பேற்றைக் கட்டுப்படுத்தாவிடில் பேராபத்தாம்!

★

புதுடில்லி, நவ. 12—

"கடந்த 30 ஆண்டுகளில் கிடைத்ததுபோல, அடுத்த 30 ஆண்டுகளிலும் மக்களுக்கு நன்கு உணவு கிடைத்தால், 1951-ம் ஆண்டில் 36 கோடியாக இருந்த இந்தியாவின் மக்கள் தொகை, 1961-ம் ஆண்டில், 41-கோடியாகவும், 1971-ம் ஆண்டில், 46-கோடியாகவும், 1981 ம் ஆண்டில் 52 கோடியாகவும் உயரும்."

"இந்தியாவில் மக்கள் தொகை அதிகமாவதைக் கட்டுப்படுத்துவதற்கும், 5 ஆண்டுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருப்பதைவிட அதிகமான அளவில் விவசாயஉற்பத்தியைப் பெருக்குவதற்கும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்."

—இவ்வாறு, அண்மையில் கிடைத்துள்ள புள்ளி விவரக் கணக்குகளைக் கடந்த 60 ஆண்டுகள் புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, முடிவிற்கு வந்துள்ள புள்ளி விவரக் கமிஷனர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அவர், 1951-ம் ஆண்டு புள்ளி விவரக் கணக்கு பற்றி அரசாங்கத்திற்குக் கொடுத்துள்ள அறிக்கையிலிருந்து தெரிவதாவது:—

"இந்தியாவில், ஒவ்வொருவரும் சம்பாதிக்கக்கூடிய பணத்தைக் கொண்டு 3 பேர் சாப்பிடுகிறார்கள்—அதாவது, சம்பாதிக்கும் ஒவ்வொரு நபரும் வேறு இரண்டு பேருக்கு, உணவு தரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது."

'போதுமான வருமானம் இல்லாமையால், ஏதோ கொஞ்சம் சம்பாதிப்பவர்கள் கூட, இதர நபர்களின் தயவுடன் வாழ்க்கையை நடத்தவேண்டியிருக்கிறது. சுயமாக வாழ்க்கை நடத்தக்கூடிய அளவுக்குச் சம்பாதிக்கும் மூன்று நபர்களில் ஒருவர், அரைகுறை வருமானம் உடைய இன்னொரு நபருக்கும் உணவு தரவேண்டியிருக்கிறது."

ஒருவர் சம்பாதித்து, மூவர் உயிர் வாழவேண்டி இருக்கிறதாம்

எதிர்கால மக்கள் தொகை பெருக்கம் பற்றி விளக்கம்

"உணவுக் கட்டுப்பாடு அதிகரித்துக் கொண்டே வருமானால், உணவுப் பொருள் விநியோகம் சீர்குலைந்து, 1921-ம் ஆண்டிற்கு முந்திய 30 ஆண்டு காலத்தில், மக்கள் பெருக்கத்திற்குத் தடையாக இருந்த பஞ்சம், பட்டினி முதலிய இயற்கைக் கோளாறுகள் தோன்றிவிடக் கூடும்."

"இறப்புக்குத் தகுந்தாற்போல், பிறப்புகளையும் கட்டுப்படுத்த, தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும். மேலும், மேலும் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு போவதை, 40 சத விகிதத்திலிருந்து 5 சத விகிதமாகக் குறைக்கவேண்டும். இதற்காகப் பிரசவம், சிசு சம்ரட்சணை சம்பந்தமான நிறுவனங்களை தேசிய அடிப்படையில் நிறுவ வேண்டும்."

"மேற்கண்ட நடவடிக்கைகளை ஏக காலத்தில் கையாண்டால், இந்திய மக்கள் தொகை 45 கோடி ஆவதற்குள், உணவுப் பெருக்கத் துறையிலும், மக்கள் பெருக்கத்தைத் தடை செய்வதிலும் நமது நோக்கம் ஈடேறி, இந்திய மக்கள் தொகை எப்பொழுதும் 45 கோடியாகவே இருக்கும்."

திருமதி ஊ. பு. அ. சௌ. பாலம்மாள் அவர்கள் பிரிவு

சென்னை, நவ. 12—

நம் அருமைத் தோழர், காலஞ்சென்ற பட்டிவீரன்பட்டி ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன் அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார் திருமதி பாலம்மாள் அவர்கள் 11—11—53-ல் உயிர் நீத்தார் என்ற தந்திச் செய்தி, நேற்று இரவு 10 மணிக்குக் கிடைக்கப்பெற்றோம். அம்மையார் அவர்கள் சிறிது காலமாகவே உடல் நலிவோடிருந்தார்கள். மருத்துவ சிகிச்சைகளும் பெற்று வந்தார்கள்.

நம் தலைவர் பாண்டியன் அவர்கள் பிரிவால், மனவேதனையடைந்த உள்ளம், இயற்கையின் முடிவை இறுதியாக அடைந்துவிட்டது.

காலஞ்சென்ற அம்மையார், தீனதயாளன், பாஸ்கரன், கிருட்டிணமூர்த்தி என்ற புதல்வர்களையும், விஜயாம்பிகை என்ற புதல்வியையும், மற்றும் பேரன், பேத்தி, மருமக்களையும் விட்டுப் பிரிந்து சென்றார்கள்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

செய்தி : 12—11—1953 வியாழன்

வஞ்சம் நிறை நெஞ்சம்!—2

நடது தலைவர்கள் மீது வழக்குத் தொடுக்க போலீசுக்குச் சட்டத்தைப் பிறப்பித்தவர், தலைவர்களைச் சிறையில் தள்ளி தொல்லை கொடுத்து வருபவர், சட்டத்தை மீறினவர்கள் என்று சொல்லப்படுகிறவர் விஷயத்தில்கூட சொந்தக் கட்சியினர் மாற்றுக் கட்சியினர் என்று பாரபட்சம் காட்டுகிறவர் என்றும், பளிங்குபோல தெரியும் விளக்கமான உண்மைகளை மறைத்தும், திரித்தும் கூறிவருகிறார் என்றும், நேற்று நாம் அமைச்சர் ஆச்சாரியார் அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இன்று அதைத் தொடர்ந்து மேலும் சில கூறுகிறோம்.

ஐம்பெரும் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 500 அபராதம் விதிக்கப்பட்டது. அனைவரும் அபராதம் கட்ட மறுத்து, தீர்ப்பின்படி, மூன்று திங்கள் சிறைவாசத்தை ஏற்றுக்கொண்டனர். சிறையிலும் இருக்கிறார்கள். அவர்கள் அரசியல் தலைவர்கள். அவர்களுடைய கொள்கைகள் காங்கிரஸ் கருத்துக்கு மாறுபட்டதாக இருக்கலாம் அல்லது ... பட்டதாகக் கூட இருக்கலாம். அவர்கள் பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டவர்களும் அல்ல பலாத்கார செயல்களை அவர்கள் தூண்டவுமில்லை. தலைவர்களின் செயலின் தூய்மையை, தண்டனை கொடுத்த மாஜிஸ்திரேட் அவர்களே இவ்வாறு பாராட்டிக் கூறியிருக்கிறார் எனவே கடுமையாக தண்டிக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு, சட்டம் சொரும் நியாயத்தை நிலைநாட்ட, குறைந்த அளவு தண்டனையை மாஜிஸ்திரேட் கொடுத்தார்.

சட்டம் சொரும் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற மாஜிஸ்திரேட்டின் கண்ணோட்டத்தைத்தான், ஒரு சர்க்காரின் பிரதம அமைச்சர் என்ற முறையில் ஆச்சாரியார் அவர்களும் கொள்ள வேண்டும். ஆனால் ஆச்சாரியார் அந்தக் கண்ணோட்டத்தைக் கொண்டு, ஐவர்களின் செயலை ஆராய்ந்து பார்க்க விரும்பவில்லை. பழி வாங்கும் கச்சுக் கண்கொண்டுதான், அதை நோக்குகிறார்.

மாஜிஸ்திரேட்டின் கண்ணோட்டம் அமைச்சர் ஆச்சாரியாருக்கு இருந்திருக்குமானால், அபராதம் கட்ட ... மறுத்துச் சிறை சென்ற ஐவர்களின் தண்டனை காலம் ... முடிவடைவதற்குள்ளாகவே, அவர்களை விடுதலை செய் ... க வேண்டும். இதைத்தான் ஒரு நாகரிக ... மக்கள் எதிர்பார்ப்பர். இதுதான் அரசியல் அற ... சிறந்த மனிதப் பண்பும் ஆகும். இந்தச் சிறப்பு ... , ஆச்சாரியார் அவர்களிடம் ஒருவரும் எதிர் ... பார்க்கவில்லை என்பதாலும், இச்சம்பவத்திலும் ... பொதுமக்களிடை மூண்டெழும் அதிருப்தி ... யை ... பிடிக்காமல் இருக்க வேண்டுமே என்ற ... அரசியல் யூகத்தை அமைச்சரிடம் எதிர்பார்ப்பது ... ஆகாது.

மகா புத்திசாலி என்று சிலரால் புகழப்படுகிற அமைச்சர் ஆச்சாரியாரிடம், இந்தச் சாதாரண அரசியல் தந்திரத்தைக்கூட நாம் எதிர்பார்க்க முடியவில்லை. காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்குத் தேடித் தரவேண்டும் என்ற நல்ல நினைப்பு ஆச்சாரியாருக்கு இருந்தால் அல்லவோ, அவர், இது விஷயத்தில் மட்டுமல்லாமல், மற்ற எல்லா செயல்களிலுமே நியாயத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கப்போகிறார்? அவருக்குள்ள ஆசையெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, அவரே குறிப்பிட்டுள்ளதுபோல, தனது மனக்குரங்கு ஆடுகிறபடி எல்லாம் ஆட்டம் போட்டு, மாற்றுக் கட்சியினரை வாட்டி வதைத்து, காங்கிரசையும் 'லங்காதகனம்' செய்துத் தலை முழுகிவிட வேண்டும் என்பதே ஆச்சாரியார் அவர்களின் மறுக்கமுடியாத உள்ளக்கிடக்கையாகும்.

நீதி வழங்குதல் என்பது, இளகிய தன்மையுடன் ஒன்றியிருக்க வேண்டுமேயல்லாது, பழிவாங்கும் விரிவிலா எரிவுடை நெஞ்சத்தோடு ஒன்றி இருத்தல் அறவே கூடாது என்பதுதான் நமது கோரிக்கை. நிற்க,

தலைவர்களின் தண்டனை காலம் முடிவடைவதற்குள், ஆச்சாரியார், அவர்களை விடுதலை செய்ய முன்வந்திருக்கவேண்டும். அந்த பாவ காரியத்தைச் செய்ய அவருக்கு, அவருடைய மனக்குரங்கு இடந்தரவில்லையானாலும், ஐவர்களும் சிறை தண்டனையை அனுபவித்து வருவதால், அவர்களுடைய அபராதத் தொகையை வசூலிக்கக் கூடாது என்ற முடிவிற்காவது ஆச்சாரியார் அவர்கள் வந்திருக்க வேண்டும். அதற்கும், அவருடைய மனக்குரங்கு ஒருப்படவில்லை.

அபராதத் தொகையை வசூலிப்பதாக இருந்தால்கூட, ஐவர்களும் தண்டனை காலம் முடிந்து வெளியில் வந்த பிறகு வசூலித்துக் கொள்ளலாம் என்ற பெரும் புத்தியை ஆச்சாரியார் அவர்கள் கொண்டிருக்க வேண்டும். இப்படிக் காலம் தாழ்த்தி வசூலிப்பதால், சென்னை சர்க்காருக்கு ஆபத்து ஒன்றும் வந்துவிடப் போவது கிடையாது. ஆனால், ஆச்சாரியார், தலைவர்கள் சிறையிலே இருக்கும்பொழுதே, அவர்கள் அபராதத் தொகைகளை வசூலித்துவிட, அவர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்து ஏலம் போடுவது என்ற சிறு செயலில் ஈடுபட்டார்.

அபராதத் தொகையை ஆறு ஆண்டுகளுக்குள் என்றைக்கேனும் வசூலித்துக் கொள்ளலாம் என்று சட்டம் விளக்கமாகக் கூறுகிறது. எனவே, தலைவர்கள் உள்ளே இருக்கும்போதே, வெளியே இருக்கும் அவர்கள் சொத்துக்களை ஜப்தி செய்ய ஆச்சாரியார் அவசரப்பட்டதற்கு, சட்டப்படி எந்த வித நியாயமும் கிடையாது. மனித தர்மமும், இந்த அவசர புத்தியை நேர்மையானது என்று ஒத்துக் கொள்ளாது.

அபராதத் தொகையை வசூலிப்பதில் ஆச்சாரியார் காட்டிய அவசரப் புத்திக்கு சட்டமும் அரண் செய்யவில்லை; மனிதப் பண்பும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது விளக்கமாகிறது. எனவே, ஆச்சாரியாரின் அவசரத்திற்கு அவருள்ளத்தில் ... கொண்டு இருக்கும் மனக்குரங்கின் சேட்டையைத்தான் காரணமாகக் கொள்ளவேண்டி இருக்கிறது.

சிறையில் உள்ள தலைவர்களுக்கு, அவர்கள் சிறையில் அல்லல்படும் காரணத்தால் ஏற்படவிருக்கும் ஆக்கத்தைத் தடுத்துவிட வேண்டும் என்ற அழுக்காறு கொண்டுவிட்ட ஆச்சாரியார், தனது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள கலபமான முறையை மேற்கொண்டு இருக்கலாம். அதாவது, தலைவர்களை உடனடியாக விடுதலை செய்துவிட்டு, அவர்கள் வெளியே வந்தவுடனே, அவர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்து, ஏலத்துக்குவிட்டு, அவர்களுடைய அபராதத் தொகையை வசூலித்துக்கொண்டு இருக்கலாம். இந்த நடைமுறையால், ஆச்சாரியார் விரும்பாத அவர்களுடைய ஆக்கமும் தடுக்கப்படும்; அபராதத் தொகையை வசூலித்தாக வேண்டும் என்ற நினைப்பும் ஈடேறும்.

இந்த நியாயமான முறையும் அவருடைய மனக்குரங்குக்குத் திருப்தி அளிப்பதாக இல்லை. தலைவர்களும் உள்ளே இருக்க வேண்டும் அதே காலத்தில், அவர்களுடைய அபராதத் தொகைக்காக அவர்களின் சொத்துக்களை ஜப்தி செய்து, ஏலத்தில்விட்டு வேடிக்கைப் பார்க்கவேண்டும் என்ற கொடுமதியைத்தான் ஆச்சாரியாரின் போக்கு எடுத்துக்காட்டுகிறது. நிற்க,

தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று நமது தோழர்கள் செய்யும் அமைதியான கிளர்ச்சிகளைக் கண்டு, ஆச்சாரியாருக்குச் சீற்றம் ஏற்படும் அளவிற்கு சிந்தனை வேலை செய்வதாகக் காணோம். சிறு செயல்களை ஒன்றன்பின் ஒன்றாகச் செய்வதிலேயே அவருடைய மனக்குரங்கு தீவிரம் காட்டுகிறது.

அபராதத் தொகையை வசூலிப்பதில்தான், ஆச்சாரியார் தமது எரிவுள்ளத்தைக் காட்டிக்கொண்டார் என்றால், மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பை அலட்சியப்படுத்தவும் முனைகிறார்.

இந்தப் போக்கு, ஓரோர் வகையில் நீதிமன்றத்தை அவமதித்தக் குற்றமுமாகும் என்று எடுத்துக்கூற ஆசைப்படுகிறோம். சில பல கொள்ளை, கொலை வழக்குகளில்கூட கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பு, குற்றவாளிகள் என்று சொல்லப்பட்டவர்களுக்குச் சாதகமாக இருந்துவிட்டால், அந்தத் தீர்ப்பின்மீது உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யும் பேத புத்தியை சர்க்கார் கொள்ளுவது கிடையாது. தாராளமாகவே சர்க்கார் நடந்துகொள்ளுவதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது.

கொலை, கொள்ளை குற்ற வழக்குகளில் சர்க்கார் காட்டிக் கொள்ளும் பெருந்தன்மையைக் காட்டிலும், அதிகமான பெருந்தன்மையை, அரசியல் குற்றம் புரிந்தவர்கள் என்று கூறப்படுகிறவர்கள் விஷயத்தில் ஒரு சர்க்கார் காட்ட முன்வரவேண்டும் ஆச்சாரியார் சர்க்காருக்கு இந்தச் சிறு நடைமுறைகூடத் தெரிந்திருப்பதாகக் காணோம்.

மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பில் கொடுக்கப்பட்டுள்ள தண்டனை குறைவாக இருக்கிறது என்றும், தண்டனையைக் கூட்ட வேண்டும் என்றும், ஆச்சாரியார், இப்பொழுது சர்க்கார் சார்பில் உயர் நீதிமன்றத்தில் ரிவிஷன் மனு கொடுத்திருக்கிறார்.

இந்தப் போக்கில் இருந்து, வெளியாகும் உண்மை ஒன்றே ஒன்றுதான். அதாவது எப்படியும் மாற்றுக் கட்சியினர் என்பவர்களை, அவர்கள் குற்றம் புரிந்தவர்களாக இருந்தாலும், இல்லாமற்போனாலும், எந்த வகையிலும் துன்புறுத்தி தொல்லை கொடுத்து, அதைக் கண்டு தாம் மகிழவேண்டும் என்ற வஞ்சக நினைப்பைத் தவிர, ஆச்சாரியார் சர்க்காருக்கு வேறொன்றும் இல்லை என்ற முடிவிற்குத்தான் வரவேண்டியதாக இருக்கிறது.

இந்தப் போக்கு காங்கிரசையும் கறைபடுத்தும், அமைச்சர் ஆச்சாரியார் அவர்களின் சொந்த சமூகத்தவரையும் மாசுபடுத்தும் என்ற மகத்தான உண்மையை அவருக்கு அறிவுறுத்தி, இதை முடிக்கிறோம்.

"தடுப்புக்காவல் சட்டம் — நான்தோன்றித்தனத்தையே வளர்க்கும்"

நீதியளிக்காது நெடுநாள் பூட்டிவைப்பது நேர்மையா?

ரிசர்வ் பாங்கி உத்திரவு!

பம்பாய், நவ. 10—

இந்தியக் கப்பல்களை இன்ஷ்யூர் செய்யும்போது, இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளிடமே செய்ய வேண்டுமென்று ரிசர்வ் பாங்கு உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால், ஆண்டுகள் தோறும் அயல் நாடுகளுக்குச் செல்லும் 50 லட்சம் இந்தியாவிலேயே தங்கி விடுமென்றும் அயல் நாட்டு செலாவணி மிச்சப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

பிரிட்டன் வழக்கறிஞர் பிரிட் கண்டனம்

நேரு சர்க்காருக்கு "அர்ப்பணம்"!

லாகூர், நவ. 11—

"குற்றவாளிகளெனக் கருதப்படுவோரை விசாரணையின்றி காலவரையறையில்லாமல் காவலில் வைப்பது, சொந்த விருப்பு வெறுப்புகளைப் பெரும் அளவில் சாதித்துக்கொள்வதற்கு வாய்ப்பளிப்ப தோன்றாகும். இத்தகைய முறை பொருத்தமும் உசிதமுமானதன்று."

—என்பதாக பிரிட்டனின் பிரபல வழக்கறிஞரும் ராணியின் சட்ட நுணுக்க ஆய்வுரையாளருமாகும் தோழர் டி. என். பிரிட் கருத்து தெரிவித்துள்ளார்.

லாகூர் ரோட்டரி சங்கக் கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றிய தோழர் பிரிட், இந்திய சர்க்கார் மேற்கொண்ணும் இம்முறையை வெகுவாகக் கண்டித்தார்.

"விசாரணையின்றி காவலில் வைக்கப்படும் ஒரு நபருக்குக் கோர்ட்டில் நீதி கிடைக்குமா, அவர் உண்மையிலேயே குற்றவாளியாயில்லாதிருக்கும் நிலையில் விடுதலை கிடைக்குமா, என்றெல்லாம் அஞ்சி பீதியுற்று நிற்கும் வகையில் நிர்வாகத்தார் நடந்துகொள்ளும் தோரணைக்கு வழி வகுத்துக் காட்டுகிறது, இம்முறை," என்று மேலும் தெரிவித்தார் தோழர் பிரிட்.

"போர்—புரட்சி—கொந்தளிப்பு இது போன்ற நெருக்கடி காலங்களில் இத்தகைய ஏற்பாடொன்று தேவைதான். ஆனால் இவை இல்லாக் காலத்தில் இது போன்ற தீவிரமான சட்டமொன்றை குடிமகனொருவன் மீது பாய்ச்சி—அவன் கோர்ட்டுக்குக்கூடச் செல்ல வாய்ப்பளிக்காமல் சிறைக்குள் பூட்டி வைக்க வேண்டிய அவசியமென்ன என்பது எனக்குப் புரியவில்லை"

என்று தோழர் பிரிட் மேலும் எடுத்துரைத்தார்.

நடைமுறைக்கு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

படும். முதல் முதலாக வட்டார மொழி ஆக்கத்தில் இந்தப் பரீட்சையை மேற்கொள்ள வேண்டும்."

"தொழில் நுணுக்க கலைகளை குறித்து வட்டார மொழிகளில் நூற்கள் ஆக்கப்பட்ட பின்னரே; ஆங்கில மொழியை மாற்றியமைப்பதென்பதைக் கருதவேண்டும்."

கோவை விவசாயக் கல்லூரியின் முன்னுள் முதல்வராக இருந்த தோழர் சி. எம். ஜான் என்பவர் புதிய கல்வித் திட்டம் பற்றிப் பேசும்பொழுது,

"புதிய திட்டத்தை, மாநிலம் முழுதும் திடீரென்று அமுல் நடத்த முற்பட்டதற்கு மாறாக, தேர்ந்தெடுத்தச் சில இடங்களில் பரீட்சார்த்தமாக திட்டத்தை சர்க்கார் நடைமுறைக்குக் கொண்டு வந்தால், அது நேர்மையானதாக இருந்திருக்கும்."

தொழில் பயிற்சியில் விவசாயக் கல்விக்கே சிறப்புத் தரப்பட வேண்டும் என்றும், விவசாயப் பயிற்சிப் பள்ளிகளே நமது கிராமங்களில் தேவை என்றும் குறிப்பிட்டார்.

தூத்துக்குடி வழக்கு நிதி

★

முன் தொடர்ச்சி ரூ.	1840—8—7
சென்னை தியாகராயநகர் ஒ. வி. மணி	1—0—0
,, மண்ணடி இ பெருமாள்	1—0—0
,, மண்ணடி எஸ். ராமலிங்கம்	1—0—0
சென்னை டி. யூ. சி. எஸ். தோழர்கள்:	
இரா. முருகேசன்	1—0—0
அப்புது	1—0—0
பூ சி. பாலசுப்ரமணி	1—0—0
அ. பொன்னம்பலம்	1—0—0
ஆ. து. மோகன்	1—0—0
ஜி. டி ராதாகிருஷ்ணன்	1—0—0
கே. ஏழுமலை	1—0—0
கே. பாலு	1—0—0
எம். ஈ ராமானுசம்	1—0—0
ஏ. வி. வீரராகவன்	1—0—0
கே. பி. லட்சுமணன்	1—0—0
சென்னை, மயிலை என். சுப்ரமணியம்	2—0—0
திருமங்கலம் கு. ப. ம. தர்மன் மூலம்:	
,, ம. த அண்ணாதுரை	5—0—0
,, ம. த. ராசன்	5—0—0
மதுரை எஸ் கிருஷ்ணசாமி	5—0—0
,, 'கிளர்ச்சி' அன்பர்	5—0—0
மண்டபம் காம்ப் எஸ். நாகூர் மீரான்	2—0—0
திருச்சூர் அனுதாபி ஒருவர்	10—0—0
கொழும்பு ஜே கே. கே. சுந்தரராசன் (ஏ மாரிமுத்து மூலம்)	50—0—0
சென்னை 8-வது வட்டம் சாந்தலிங்கம்	1—0—0
,, சி ஆர். பாலசுந்தரம்	1—0—0
அகமத்நகர் பி. ராசன்	3—0—0
எழும்பூர் ஆர் மாணிக்கம் மூலம்	5—4—0
செண்பகால்லூர் முருகேசன்	0—8—0
சென்னை, அய்னாவரம் தென் ரயில்வே ஜாயிண்ட் அலுவலகத தோழர்கள்	40—0—0
விருதுநகர் எம். எஸ். பெரியசாமி படிப்பகத்தார் மூலம்:	
த. சங்கரலிங்கம்	8—0—0
கா. பி. அறவேந்தன்	1—0—0
ஆர். தர்மராசன்	1—0—0
ம. அ. ஆறுமுக நாடார்	1—0—0
ச. நடராசன	1—0—0
ஆர். மாரியப்பன்	1—0—0
வி. சவரிமுத்து	1—0—0
வி. எஸ். முத்துசாமி	1—0—0
விருதுநகர் தம்பிதுரை சிற்றுண்டி விடுதித் தொழிலாளர்கள்:	
அ கருப்பையா	1—0—0
க. ஆறுமுகம்	1—0—0
ம. ஆ. வேல்சாமி	1—0—0
ஆர். பழனிசாமி நாடார்	1—0—0
கே. கே. எஸ். நடராசன்	1—0—0
பெ. ரத்தினம்	1—0—0
ச. கந்தசாமி	1—0—0
எஸ். பெரியசாமி	1—0—0
கே. பி. அன் கோ	2—0—0
கந்தசாமி	1—0—0
தங்கராஜ்	1—0—0
ஒரு அனுதாபி	1—0—0
,,	1—0—0
சௌந்தரபாண்டியன், லட்சுமணன், ராமசாமி, தங்கமணி, எஸ். சுப்பையா, வேலுசாமி, ஆர். சுப்பையா முதலியோர்	2-12—0
தேவபாண்டலம் ந. காசியப்பன்	1—0—0
,, டி. பி. கேசவன்	1—0—0
,, பி. நாராயணன்	1—0—0
,, எஸ். ஆர். அல்லாபக்ஸி	1—0—0
,, சுபகான்	1—0—0
,, வாசுதேவன், செயத்தான், நடேசன், அப்துல் ரகிமான், தனக்கோடி, ஆர். ராமசாமி. கே. நாராயணசாமி, பி. ராமசாமி, கருணாநிதி, ஏ. சண்முகம், எம். பாலசுந்தரம், மொட்டையன், வெங்கடநாராயணன், ஜெகநாதன், பி. கண்ணன், அலமேலு, சின்னக்கண்ணு, முனுசாமி, கோவிந்தசாமி, பொன்னுசாமி, முகம்மத் தஸ்தகிர், அப்துல் காதர், எஸ். பெரியசாமி, ஏ. ராமசாமி, இளவழகன், பழம்நீ, ராயமுத்து, வி. ஆறுமுகம், எ. நடேசன், ரங்கசாமி, அகமத் சரீப் முதலியோர்	10—0—0
பழனி மு. தங்கவேலு	1—0—0
சேலம் அம்மாபேட்டை எம். எம். பி. சண்முகம்	1—0—0
சேலம் கச்சிப்பாளையம் வி. பி மாரியப்பன்	2—0—0
மதுரை எஸ். பி. சி. போஸ்	2—0—0
,, அ. பொன்னுச்சாமி	1—0—0
,, ஏ. எஸ். எம். குருசாமி	2—0—0
,, எஸ். சீனி முகம்மது	1—0—0
,, எஸ். முனியப்பன்	1—0—0
சென்னை, மயிலை வி. குப்புசாமி	1—0—0
,, வி. முனுசாமி	1—0—0
,, கே. கந்தசாமி	1—0—0
,, ஆர். வேதாசலம்	1—0—0
வந்தவாசி பி. தண்டபாணி, பி. ஈ	5—0—0
குளக்காபாளையம் (கோவை) தி. மு. கழகம்	5—0—0
ராசபாளையம் கார்மேகம்	2—0—0
,, கானிமுத்து	1—0—0
,, தங்கவேல்	1—0—0
,, கடக்கரை	1—0—0
,, அய்யனார்	1—0—0
,, கணபதி	1—0—0

(தொடர்ச்சி அடுத்த பத்தி பார்க்கவும்)

இவர்கள் அங்கே முதலாளிகள்! நம்மவர்கள் இங்கே அடிமைகளா?

பம்பாய்—ஆமதாபாத் கழகங்கள் — நம் வெளிநாட்டு பிரச்சார நிலையங்களே!

ஆமதாபாத்தில் என். எஸ். இளங்கோ

ஆமதாபாத், நவ. 12—

ஆமதாபாத் தி. மு. கழகத்தின் சார்பில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம், தோழர் வடிவேலு தலைமையில் நரோடா ரோடு கஸ்தூரிபாய் மண்டபத்தில் 6—11—53-ல், நடைபெற்றது. தோழர் கே. சிதம்பரம் வந்திருந்தோரை வரவேற்று, சிறிது நேரம் பேசிய பிறகு, தோழர் என். எஸ். இளங்கோ கழகக் கொள்கைகளை விளக்கி நீண்ட நேரம் விரிவுரையாற்றினார்.

"நான், ஆமதாபாத்தின் இந்தப் பகுதிகளைத் திரும்பிப் பார்க்கிற இடமெல்லாம் வானளாவி நிற்கிற புகைப் போக்கிகளைத்தான் காண்கிறேன். இங்கே இவ்வள[illegible] புகைப் போக்கிகளை எழுப்பியி[illegible]க்கிறவர்கள், குஜராத்திலிருந்[illegible] வந்திருக்கிறவர்கள் என்று கூ[illegible]ர்கள். எவ்வளவு தொழிற்சா[illegible] நான் காண்கிறேன்? இவ்[illegible]வு தொழிற்சாலைகள் எவ்வாறு [illegible]ப்பட்டன?

தென்னிந்திய[illegible]ல் யாரை எதிர்த்து நாம் [illegible]ளர்ச்சி செய்கிறோமோ, அவ[illegible]ின் சரண்டல் காதோன் இந்[illegible]மதாபாத். ஆனால், இங்கே [illegible]முடைய தோழர்கள் விடியற்[illegible]லையிலே எழுப்பிய 'திராவிட நா[illegible] திராவிடருக்கே' என்ற ஒலி எவ்[illegible]வு பலம் பொருந்தியதாக [illegible]கிறது? தென்னிந்தியாவி[illegible] நாங்கள் எழுப்புகிற அந்த ஒலிக்கும், ஆமதாபாத்திலே நீங்கள் எழுப்புகிற ஒலிக்கும் எவ்வளவு மகத்தான சக்தியிருக்கிறது?

வட நாட்டில் இருக்கிற மில்களுக்கு மூலதனம், நாம் தந்தது தான். தென்னிந்தியாவில், திராவிட நாட்டிலே விளைகிற மூலப் பொருள்களை நாம் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறோம். மிளகும், ஏலமும், இரும்பும், மைக்காவும், மற்றதும் நாம் அனுப்புகிறோம். அதற்குப் பதிலாக வருவது என்ன தெரியுமா? அனுப்பிய நாட்டின் பஞ்சம் போக்க, அரிசி: கோதுமை அல்ல; — நெசவு செய்கிற கதிர்கள்! ஆட்டோமாடிக் தறிகள்! அதற்கு வேண்டிய பஞ்சு வேண்டுமோ? தென்னாட்டுக்கு ஒரு தகதிலை டில்லி ஏகாதிபத்தியம் அனுப்புகிறது அங்கிருந்து, பஞ்சு இங்கே பல ஆயிரம் பேல்கள அனுப்பப்படுகின்றன. ஆலைகளை பல 'ஷிப்டு'கள் ஓட்டத் தேவையான மின்சாரம, ஐந்தாண்டுத் திட்டத்திலே உருவாகிறது. நம் நாட்டிலே உதாசீனம் செய்யப்பட்டு, விளைவான பஞ்சுகளை இங்கே அனுப்பிவிட்டு, நம் நாட்டு ஆலைகள மூடப்படுகின்றன. ஏன என்று கேட்டால், பஞ்சு இல்லை என்று, காரணம் காட்டுகிறார்கள்! மின்சார வசதி இல்லை என்று காரணம் காட்டுகிறார்கள். அதனால் தென்னாடு தேய்கிறது! வடநாடு வளர்கிறது!!

ஆலைகள் மூடப்பட்டு வேலை[illegible]த் திண்டாட்டம் அதிகரிக்க[illegible] அங்கே இருந்த மில் தொழி[illegible], பஞ்சு போன திக்கிலே [illegible]டு பம்பாய் ஆலைகளில், [illegible]த் ஆலைகளில் வேலைக்கு அ[illegible] அவர்கள் உண்டாக்கிய [illegible] திராவிட நாட்டுக்கு [illegible] அதைப் பணமாக்கிறார்கள்.

மூலதனம் நம்முடையது—தொழிலாளி நம்மவன்—விற்றுப் பணம் தருகிறவர்கள் நம்மவர்கள் — ஆனால் அந்தப் பணம் போகிற பகுதியோ, தெற்கே அல்ல—வடக்கே குஜராத்துக்கு!

கவர்னர் பிரகாசா, அன்மையிலே சென்னையிலே குறிப்பிட்டார்; "என்னுடைய மூதாதைகள் சென்னையிலே தான் பணம் திரட்டினார்கள்; அந்தப் பணம் ஏழு தலைமுறைகளுக்கும் பயன்படுகிறது," என்று! ஒரு தலைமுறையில் ஈட்டிய பொருள் ஏழு தலைமுறைகளுக்கு அவர்களுக்குக் காணுகிறது. நம் தொழிலாளியோ, எதற்கு தேய்ந்து, வடநாட்டுக்கு வந்து ஈட்டிய பொருள் தனக்கே போதாமல், தென்னாட்டிற்குத் திரும்பிப் போக பணம் காணாமல் இங்கே தவிக்கிறான்.

இங்கே, கூட்டத்தில் நிறைந்திருக்கிற திராவிட மக்களை நான் காண்கிறேன். 1,000—1,500 மைல்களுக்கப்பால் இருந்து இங்கே வந்து தொழிலாளியாய்—தாயகத்தைக் கூட காணாமல் இங்கே கிடந்து வாடுகிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

ஆமதாபாத்திலே கழகம் என்ன பணியாற்றவேண்டும் என்பது கொஞ்சம் சிக்கலான பிரச்சினை தான். தாயகத்திலே பிரச்சினைகள் உண்டு—தனித் தனியாக பிரிவினை உண்டு; ஆனால், ஆமதாபாத் கழகத்துக்கு என்ன பணி? இந்தியத் தேசிய காங்கிரஸ் உருவாகி வளர்ந்தபோது, தங்கள் கொள்கைக்குப் பிரச்சாரம் செய்ய அமெரிக்காவிலே ஒரு பிரசார ஸ்தாபனம் வைத்திருந்தார்கள். இங்கிலாந்திலே ஒரு பிரச்சார ஸ்தாபனம் வைத்திருந்தார்கள். ஒரு சமயம் காந்தியாரே சொன்னார்: 'இந்த பிரச்சார ஸ்தாபனங்களுக்கு அதிகம் செலவாகிறது; மூடிவிடலாம்,' என்று! அதே போலத்தான், [illegible]ய், ஆமதாபாத் கழகங்கள் தி. [illegible]கழகத்திடம் பணம் வாங்காமல்—[illegible]போது பணத்தையும் தந்து[illegible] பிரச்சார ஸ்தாபனங்களாகப் [illegible] கின்றன. எனவே, இந்[illegible] நாட்டுக் கிளைகளுக்கு பணியும்—பொறுப்பும் அதிகம்; அவர்களுக்கு இருக்கிற வேலையும்—கடமையும் அதிகம்.

வடநாட்டிலே நம் கொள்கைகளைப் பரப்புகிற ஸ்தாபனங்களாய் பணியாற்றுங்கள்! விளங்காதவர்களுக்கெல்லாம் விளக்கம் தாருங்கள்! புரியாதவர்களுக்கு எல்லாம் புரியும்படி விளக்குங்கள்! இந்தக் காரியம் சாதாரணமானதல்ல; இதைச் செய்து முடிக்கிற செயல் வீரர்கள் இங்கு ஏராளம் அண்ணா சொல்லிப் போன அந்த பொன்மொழிகளை, நாடு பூராவும்—வடநாட்டு முற்போக்கு எண்ணம் படைத்தவர்களுக்கெல்லாம் விளக்குங்கள்"

கூட்ட ஆரம்பத்தில் ஜமால்பூர், மணிநகர், நரோடா, மதுமலர்ச்சி நாடகமன்றம், மாணவ முன்னேற்றக் கழகம், லக்குடி நடராஜன் மன்றம் முதலியவைகளின் சார்பில் தோழர் இளங்கோவுக்கு மலர்மாலைகள் சூட்டப்பட்டன. தோழர் பெருமாள் நன்றிகூற கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிந்தது.

6—11—53 அன்று காலை 10 மணி யளவில் 'லக்ஷ்பாய் ஹாலில்' ஒரு ஊழியர் கூட்டம் சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்றது. கழகப் பணி பற்றியும்—கழகத்தினர் நடந்து கொள்ள வேண்டிய வழி பற்றியும் தோழர் இளங்கோ பேசினார். ஆமதாபாத் இளைஞர்களின் ஆர்வம் மிக மிக பாராட்டத்தக்கது. ஆமதாபாத் தமிழர்களிடையே தி. மு. கழகம் மட்டும் தான் ஒரு பெரிய பிரதிநிதித்துவ

(முன் பத்தியின் தொடர்ச்சி)

,, பரமசிவன்	1—0—0
,, இன்னாசி	1—0—0
,, ஜெயராம் மில்ஸ் பரமசிவம்	1—0—0
,, அய்யப்பன்	1—0—0
,, மங்காபுரம் திராவிட வாலிபர் மன்றம்	1—0—0
சென்னை 39-வது வட்டம் வி. பொன்னுசாமி	2—0—0
,, கா. பாண்டியன்	1—0—0
,, மா. மோகன்	1—0—0
,, தெ. ராஜேந்திரன்	1—0—0
பொன்மலை மே. க. கோட்டை கே துரைராஜ்	1—0—0
கள்ளிப்பாளையம் கே. ஆறுமுகம்	2—0—0
விருதுநகர் மா. தங்கப்பன	1—0—0
தொட்டியூர் துரை மதிவாணன்	1—0—0
நாமக்கல் சி. கந்தசாமி	4—0—0
கோயமுத்தூர் அன்பர் ஒருவர்	5—0—0
சிதம்பரம் ஜி. வி. கோபால	5—0—0
கோவில்பட்டி தி. மா. மு. கழகப் பொதுக்கூட்ட உண்டி வசூல் (பொ. தமிழரசன மூலம்)	5-11—0
நரசிங்கபுரம் தி. மு. க. என். கே. நல்லவாணம்	10—0—0
கோவை—காந்திபுரம் மா. தமிழ்க்காவலன்	3—0—0
,, நஞ்சப்பன்	3—0—0
,, கபீர்வேல்	1—0—0
,, அருளானந்தம்	1—0—0
,, நாராயணசாமி	1—0—0
,, சாமுவேல்	1—0—0
,, வீரன்	1—0—0
,, முத்து	1—0—0
,, ராமன், கோபால், ஆறுமுகம் முதலியோர்	1—8—0
கோயமுத்தூரைச் சேர்ந்த 33 தி.மு.க. ஆதரவாளர்கள்	16-10—0
சிங்கப்பூர் எஸ். கே. மாணிக்கம்	15—0—0
,, பி. ராமலிங்கம்	10—0—0
,, கே. கே. சின்னத்தம்பி	5—0—0
சென்னை தென்பகுதி ரயில்வே ஊழியர்கள் மூலம் வசூல்	19—0—0
சென்னிமலை தி. மு. கழகம்	15—0—0

ஆகமொத்தம் ரூ. 2,206-13—7

ஆச்சாரியாரின் சர்வாதிகாரம்

டாக்டர் நாயுடு காட்டும் சான்றுகள்

சென்னை, நவ. 9—

முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் பற்றி டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு இன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கை கூறுவதாவது:—

"சில காலமாக மாகாண நிர்வாகத்தில் முழு சர்வாதிகாரியாக நடந்துகொள்ளும் மனப்பான்மையை இராசகோபாலாச்சாரியார் கொண்டிருப்பது சட்டசபைக் காங்கிரசக் கட்சிக்கு ஒரு கடுமையான அனுபவமாக இருந்து வந்திருக்கிறது. சிற விடயங்களைப் பற்றி நான் குறிப்பிட்டுப்போவதில்லை. வகுப்புவாதக் கட்சிகள் காங்கிரசு மீது வகுப்புவாதக் குற்றச்சாட்டு சுமத்த முயற்சி செய்துகொண்டிருக்கும் போது, சில பெரிய மாறுதல்களைக் கட்சியுடன் கலந்தாலோசிக்காமல் இராசகோபாலாச்சாரியார் செய்திருப்பதும், செய்யத் திட்டமிட்டிருப்பதும் காங்கிரசு கட்சி மீது மக்கள் வெறுப்படையும்படி செய்துவிட்டது.

இந்த மாறுதல்கள் பின்வருமாறு:—

(1) நிலவருமான போர்டைக் கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக வட்டாரக் கமிஷனர்களை நியமித்தது.

(2) ஜில்லா போர்டுகளைக் கலைத்துவிட்டு மீண்டும் தாலுகா போர்டுகளை நியமிப்பது.

(3) அதிகாரிகளைப் பெருமளவில் மாற்றுவது.

நில வருமான போர்டைக் கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக வட்டாரக் கமிஷனர்களை நியமிப்பது பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்ட விடயம். பிரிட்டிஷார் ஆட்சி காலத்தில் இது பல தடவைகள் ஆலோசனை செய்யப்பட்டுக் கைவிடப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு சட்டசபையில் நில வருமான போர்டைக் கலைக்க வேண்டுமென்று கூறப்பட்டபோது, இராசகோபாலாச்சாரியாரே அ[illegible] யோசனையை நிராகரித்[illegible] இவர் காங்கிரஸ் கட்சி மீ[illegible] பிக்கை வைக்கவில்லை. இந்த நடவடிக்கை [illegible] கட்சிக்கா[illegible] கருதும்படியும் இ[illegible] யவில்லை.

சமீபத்தில் ஜில்லா போர்டுகளைக் கலைத்துவிட்டு விசேட அதிகாரிகளை நியமித்தபோது ஏற்பட்ட பெரும் எதிர்ப்பையும் இவர் கவனிக்கவில்லை. இவ்வாண்டு இறுதிக்குள் ஜில்லா போர்டுகளுக்குத் தேர்தல் நடத்துவதாக இவர் உறுதிமொழி அளித்தார். ஆனால் இந்த உறுதி மொழியை நிறைவேற்றாமல் இருப்பதற்காக இப்போர்டுகளை விரைவாகவே கலைப்பது மிகவும் வியப்பாக இருக்கிறது.

அதிகாரிகள் பெருமளவில் மாற்றப்படுவதும் பொது மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு அதிகாரிகள் மாற்றப்படுவதனால் அவர்கள் குடும்பத்திலிருக்கும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் கஷ்டங்கள் ஏற்படும். இது அதிகாரிகளுக்குப் பெரும் வருத்தத்தை உண்டாக்கியுள்ளது. இதனால் அரசாங்கத்திற்குப் பெரும் செலவு ஏற்படுகிறது. இதுபற்றி கட்சியை ஆச்சாரியார் கலந்தாலோசித்திருக்க வேண்டும்.

எதேச்சாதிகார ஆட்சி நடத்த விருப்பம் கொண்டிருப்பதை ஆச்சாரியார் வெளிப்படையாகத் தெரிவிக்க முற்படுவது இந்த சூழ்நிலையில் தெளிவாகத் தெரிகிறது. காங்கிரஸ் கட்சி மீது மக்கள் வெறுப்படைவதைத் தடுக்கவே கட்சியினர் முயற்சி செய்கின்றனர். பொது மக்கள், கட்சி சம்பந்தமுள்ள விடயங்களில் கட்சியுடன் கலந்தாலோசிக்க ஆச்சாரியார் ஒத்துக்கொள்ள வேண்டுமென்றே கட்சியினர் கருதுகின்றனர். ஜனநாயக முறைப்படி ஆட்சி நடத்த விரும்பவில்லையானால் கட்சியிலிருந்து இவர் வெளியேற வேண்டும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

★★★★★★★★★★★

கழகக் கூட்டம்

★

சதுப்பேரி:

(சதுப்பேரி பள்ளி அருகில்)
14—11—53 சனி மாலை 6-க்கு
தலைவர்: ஏ. பொன்ரங்கம்
பேச்சாளர்கள்:
போளூர்-சுப்ரமணியம்
வேலூர்-கருத்தோவியன்

தூத்துக்குடி வழக்கு நிதி உதவி நாடகம்

கோவை, நவ. 12—

"கோவையில், டிசம்பர் 5, 6 சனி, ஞாயிறுகளில் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் 'காதல் ஜோதி' 'ஜமீன் மாளிகை' இருநாடகங்கள் நடைபெறும்" என்று கோவை நகர தி. மு. கழகம் அறிவிக்கிறது.

★

நிதி நாடகம்

செ. மா. தோ. தோ. சங்க நிதிக்காக, வால்பாறை உயர்நிலைப் பள்ளி அருகாமையில், 13—11—53 இரவு 9-க்கு கலைவாணர் என். எ[illegible] கிருஷ்ணன், குழுவின[illegible] "பணம்" நாடக[illegible] நடைபெறும்.

[illegible]வச நாடகம்

[illegible].1—53 சனி இரவு [illegible] மணிக்கு, மீர்சாகிப் [illegible]பேட்டை, சைவ முத்தையா முதலி 3-வது வீதியில், தோழர் ஜே. சின்னதுரை அவர்கள் எழுதிய, "பணக்காரன்" என்னும் சீர்திருத்த நாடகம், கிருட்டிணம் பேட்டை முற்போக்கு நாடக மன்றத்தாரால் தோழர் டாக்டர் எம். ஏ. கரீம், எம்.சி., அவர்கள் தலைமையிலும், மு. புரட்சி மணி அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்.

★

ஆத்தூர் வட்ட தி. மு. க. செயலாளர்கட்கு

ஆத்தூர் வட்டக் குழு அமைப்பும், வட்டக் குழு செயலாளர் தேர்தலும் நடைபெற வேண்டியுள்ளதால், ஆத்தூர் வட்டத் தோழர்களும் 14—11—53 சனி பிற்பகல் 2 மணிக்கு ஆத்தூரில் நடைபெறும் வட்டக் குழு அமைப்பு கூட்டத்திற்கு கிளைக் கழக செயலாளர்களும், முக்கியஸ்தர்களும் வரும்படி ஆத்தூர் தி. மு. கழக செயலாளர் கேட்டுக் கொள்கிறார்.

பறக்கும் தட்டுகள்

லண்டன், நவ. 11—

பிரிட்டனும், அமெரிக்காவும் பறக்கும் தட்டுகள் பற்றிய விவரங்களைப் பரிமாறிக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன.

இவை மிக இரகசியமாக இருந்து வருகின்றன. அமெரிக்கா பறக்கும் தட்டுகள் விஷயங்களை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை என்றும், ஆனால், பிரிட்டன் இவ்விஷயத்தில் அதிக எச்சரிக்கை காட்டுவதாக இருக்கிறதென்றும் கூறப்படுகிறது. —ராய்டர்.

ஆண்டு விழாவும், திறப்பு விழாவும்

கணியூர், நவ. 12—

15—11—53-ல், கணியூர் தி. மு. கழக ஆண்டு விழாவும், இளைஞர் அறிவகத் திறப்பு விழாவும் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

விழாக்களில் கலந்து கொள்ள, ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., தோழர் ஜேபக்கனி, மதுரை எஸ். முத்து, தோழர் அலி சேக் மன்சூர் ஆகிய பேச்சாளர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அன்று இரவு சிற்றுளி-சுப்ரமணியம் குழுவினரின் [illegible]குத்தறிவு கலா நிகழ்[illegible]யும், ஊர்வலங்களும், கொடியேற்று விழாக்களும் சிறப்பான முறையில் நடைபெற ஏற்பாடுகள் நடைபெறு[illegible]ன்றன.

★

திருச்சி தி. மா. மு. கழக ஆரம்ப விழா

திருச்சி, நவ. 11—

திருச்சி திராவிட மா[illegible]ணவர் முன்னேற்றக் கழகச் செயற் குழு உறுப்பின[illegible]ள், கழக ஆரம்ப வி[illegible]வ வருகிற 22—11—[illegible], நடத்த முடிவு செய்[illegible]ள்ளனர். விழாவிற்குத் தோழர்கள் ஏ. கோவிந்த[illegible]மி, எம். எல். ஏ., நாஞ்சில் [illegible]. மனோகரன், சி. பி. [illegible]மாக, டாக்டர் ஏ. கிரு[illegible]சாமி, எம். பி. அம்பில் த[illegible]லிங்கம், எம். எஸ். மணி, [illegible]ங்குசம், டி. கே. சீனி[illegible]வாசன், தோழியர் அருண்மொழி பி.ஓ.எல். ஆகியோரை அழைப்பதென முடிவு செய்யப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

கமுதி தி. மு. கழகம்

5—11—53-ல், கழகக் காரியாலயத்தில், தோழர் செ. அருணாசலம் தலைமையில் செயற் குழு கூடியது. அப்போது, வெளியூர் சென்றிருக்கும் செயலாளர் தோழர் கொ. செ. காமாட்சி அவர்களுக்குப் பதிலாக இ. ல. ம. சௌந்திரபாண்டியன் அவர்களைத் தற்காலிகமாக செயலாளராகத் தேர்ந்தெடுத்து, அடுத்த ஒரு மாதத்திற்குள் உறுப்பினர் கூட்டத்தைக் கூட்டி, புதிய செயற் குழு அமைப்பதென்றும், முடிவு செய்யப்பட்டதுடன், இப்போதிருக்கும் கழகக் காரியாலயத்தை நெ. 9-38 கட்டிடத்திற்கு மாற்றவும் தீர்மானிக்கப்பட்டது.

க்ஷயரோக சிகிச்சைக்கு உதவி நிதி

சென்னை, நவ. 11—

சென்னை மாநிலத்தில், 1953—54-ம் ஆண்டைய நான்காவது டி. பி. ஸ்டாம்பு விற்பனை இயக்கத்தின் மூலம் இதுவரை ரூ 54,331—1—8 சேர்க்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பமான இந்த நிதி திரட்டும் இயக்கம் இப்போது ஆண்டு தோறும் நடைபெறும் நிகழ்ச்சியாகிவிட்டது.

இந்நிதியில், மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் பங்கு கழிக்கப்பட்ட பின்பு மீதமுள்ள தொகையைப் பின்கண்ட ஜில்லாக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது:—

சென்னை: ரூ. 4,622-3-4;
வடார்காடு: ரூ. 4,754-8-4;
கோயம்புத்தூர்: ரூ. 8,180-5-11;
தென் கன்னடம்: ரூ 4241-14-2;
மலையாளம்: ரூ. 6,078-3-8;
தஞ்சாவூர்: ரூ. 37,879-4-10;
திருச்சி: 4,0[illegible]-8-4. —ராய்டர்.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று
122-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று
121-வது நாள்

★★★★★★★★★★★

பெரியமெட்டு தி.மு. கழகம்

புதிய கிளை ஆரம்பம்

சென்னை, நவ. 10—

8—11—53-ல், சென்னைப் பெரியமெட்டு (26-வது வட்டம்) புதிய தி.மு. கிளைக் கழகத்திற்கு தோழர் இளம்பரிதி தலைமையில் தேர்தல் நடத்தப்பட்டது. அது போது தோழர்கள் அ. குப்புசாமி செயலாளராகவும், ஏ. கணேசன் துணைச் செயலாளராகவும், நல்லதம்பி பொருளாளராகவும், மு. மாறன், கோ. சடகோபன் ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், செயற்குழுவினர்களாகத் தோழர்கள் ப. சுந்தரம், தி. அ. காசி விசுவநாதன், வெ. அ. பெரியசாமி, ஆ. சோமுமணி, சா. கன்னியப்பன், வி. சந்தானம், மு. நேசன், சா. சி. சிட்டிபாபு, மாதவராசன், எ. வீரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவானைக்கோயில் தி. மு. கழகம்

திருவானைக்கோயில், நவ. 10—

1—11—53-ல், தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம் கழக மன்றத்தில் தோழர் நிரஞ்சனு தலைமையில் நடைபெற்றது. அது போது தோழர்கள் மு. துரைசாமி, செயலாளராகவும், முத்து துணைச் செயலாளராகவும், இரா. நமசிவாயம் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 3 பேர் கொண்ட செயற் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

விநாயகம் கோஷ்டியார் மீது வழக்கு

அரக்கோணம், நவ. 10—

26—9—53-ல், திருத்தணியில் நடந்த தி. மு. கழகக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தும், மாவட்டச் செயலாளர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி அவர்களின், காரை சேதப்படுத்தியும், சில தி. மு. கழகத் தொண்டர்களை தாக்கிக் காயப்படுத்தியதாக, திருத்தணி கே. விநாயகம் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் மீது போலீசாரால் தொடரப்பட்ட வழக்கு 9—11—53-ல், சித்தூர் ஜில்லா முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 19—11—53-க்கு ஒத்திவைக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வக்கீல் ரங்கநாத முதலியார் ஆஜரானார்.

பலத்த போட்டி!

லண்டன், நவ. 10—

தேயிலை வர்த்தகத்தில் பலமான போட்டியிருக்கிறதென்றும், தேயிலை விலை மிகவும் அதிகமாக இருந்து வருகிறதென்றும் 'ப்ருக் பாண்ட்' கம்பெனியின் தலைவர் கூறினார். மட்டரகத் தேயிலைகளின் விலை சிறிது கூடுதலாகி வருகிறதென்றும், இவைகள் விலை இறங்காமல் போனால் மிகவும் கஷ்டம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏஜண்டுகள் தேவை

கீழ்க்கண்ட இடங்களில் "நம் நாடு" விற்பனை செய்ய, முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. நிபந்தனை விபரங்கட்கு எழுதவும். கீழ்க்கண்ட இடங்கட்கு "நம் நாடு" போய்க் கொண்டிருந்தது. பாக்கி ரூபாய் அனுப்பி வைக்காத காரணத்தினால், நிறுத்தப்பட்டவைகளாகும். இவர்கள் பாக்கி விபரங்களையும் வெளியிடுகிறோம். நம் தி. மு. கழக(கிளை)த் தோழர்கள், நம் மதிப்பிற்குரிய ஏஜண்டுத் தோழர்களைக் கண்டு, ரூபாய் அனுப்பி வைக்கும்படி செய்ய வேண்டுகிறோம். எழுதும் கடிதங்கட்கும் பதில்கூட எழுத முடிவதில்லை, ஒரு சில ஏஜண்டுத் தோழர்கட்கு!

"'நம் நாடு' தி. மு. கழக ஏடு; அதைப் போற்றி வளர்ப்பது நம் கடமை," என்று, நம் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் கூறினார், சிறை செல்லும்போது! அதை மறந்தனர், நம் ஏஜண்டுத் தோழர்கள்! அவர்கட்கு மீண்டும் நினைவூட்டுகிறோம்.

பேராவூரணி
பாபநாசம் (தஞ்சை)
ஸ்ரீவைகுண்டம்
பழநி
கொள்ளிடம்
புவனகிரி
மங்கநல்லூர்
சிவகங்கை
தேனி
ஆண்டிப்பட்டி
சத்தியமங்கலம்
கல்லக்குடி
செங்கோட்டை
வேம்படிதாளம்
சங்கரன்கோவில்
பாகநேரி
சூலூர்

குறிப்பு:—சென்னை, உடுமலைப் பேட்டை, வால்பாறை ஏஜண்டுகள் வேறு நியமித்துள்ளோம். பாக்கி தொகைமட்டும் வரவேண்டும்.

பொறுப்பாளர்,
"நம் நாடு," இராயபுரம்,
சென்னை—13.

வ. ஆ. மாவட்டக் கழகத் தோழர்களுக்கு

அரக்கோணம், நவ. 10—

வடஆற்காடு மாவட்ட கழகத் தோழர்களுக்கு மாவட்ட செயலாளர் கீழ்க்காணும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

மந்திரிகளின் சுற்றுப் பிரயாணத்தின்போது கருப்புக்கொடி காட்டலாமா என்று கழகத் தோழர்களிடமிருந்து கடிதங்கள் வந்துள்ளது. 6—9—53-ல் நமது மாவட்டக் கழக செயற்குழுவில் நிறைவேறிய தீர்மானத்தின்படி கவர்னருக்கும் பிரதமர் ஆச்சாரியாருக்கும் கருப்புக் கொடி காட்டியாகி விட்டது.

இனி, யாருக்கும் கருப்புக் கொடி காட்டத் தேவையில்லை என்று கிளைக் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாவட்டக் கழக அறிக்கையை ஏற்று, கடமையைச் செய்த கழகத் தோழர்களுக்கு நன்றியும், பாராட்டுதலும் கூறி, இனி மாவட்டக் கழக ஒப்புதலின்றி கருப்புக் கொடி நிகழ்ச்சியோ, மற்ற போராட்ட நிகழ்ச்சியோ கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதிக அங்கத்தினர்களைச் சேருங்கள். ஆங்காங்கு கிளைக் கழகங்களை நிறுவுங்கள். வெற்றி நிச்சயம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (28, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இ. [illegible] [illegible]